| | |
|---|---|
| மையம் : ______________<br><br>மேற்பார்வையாளர்<br>கையொப்பம்: ______________ | பெயர்: ______________<br><br>பதிவு எண்: ______________<br><br>நாள் : ______________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – மார்ச்–2019**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**

Time : 1.30 hrs. Total Marks : 50

**பகுதி – 1**

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

*Read the following text and answer the questions given below in a single line.* **(5x1=5)**

சித்தார்த்தன் ஓர் அந்தணச் சிறுவன். ஒரு சமயம், அவனது ஊர் வழியாகச் சமணத் துறவிகள், யாரோடும் ஒட்டாமல் செல்வதைக் காண்கிறான். அவர்களைக் கண்ட சித்தார்த்தனது மனது சமண மதத்தை நாடுகிறது. சமண மதத்தில் சேர விரும்புவதைத் தன் தந்தையிடம் தெரிவிக்க வருகிறான், தந்தை அறையில் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். சித்தார்த்தன் அறைக்குள் நுழைகிறான்.

**வினாக்கள் :**

1. சித்தார்த்தன் யார்?

______________________________

2. சித்தார்த்தனின் ஊர் வழியாகப் போனவர்கள் யார்?

______________________________

3. சித்தார்த்தனின் மனம் எதை நாடியது?

______________________________

4. சித்தார்த்தன் எதைத் தந்தையிடம் தெரிவிக்க வந்தான்?

______________________________

5. சித்தார்த்தன் எங்கே நுழைந்தான்?

____________________________________________________________

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

*Read the following poem and answer the questions given below in a single line.*

**(5x1=5)**

மண்டும் புதுத்தொழில்கள்
    கோடி வளர்ப்போம்! – அந்த
மக்கள் தொகைக்கு நல்ல
    வேலை கொடுப்போம்!
அண்டி வருபவர்க்கும்
    சோறு படைப்போம்! இந்த
அகிலத்து நாடுகட்டு
    முன்னிலை வைப்போம்!

**வினாக்கள்**

1. கோடி அளவில் எவற்றை வளர்ப்போம்?

____________________________________________________________

2. மக்கள் தொகைக்கு எதை கொடுப்போம்?

____________________________________________________________

3. யாருக்கு சோறு படைப்பதாக கவிஞர் கூறுகிறார்?

____________________________________________________________

4. அகிலம் என்ற சொல்லின் பொருள் யாது?

____________________________________________________________

5. நாம் எங்கு முன்னிலை வைப்போம்?

____________________________________________________________

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**

*Form meaningful sentences using the following words.* **(5x2=10)**

1. விடாமுயற்சி

___

___

2. கோயில்கள்

___

___

3. பயிற்சி

___

___

4. விட்டுக்கொடு

___

___

5. ஊக்கம்

___

___

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

*Answer any Five of the following questions in a few lines.* **(5x4=20)**

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பற்றி எழுதுக.
2. தாலாட்டுப் பாடல் குறித்து எழுதுக.
3. பெயரெச்சம், வினையெச்சம் சான்றுடன் விளக்குக.
4. எழில் பள்ளிக்கூடத்துப் பையனாக இருந்தபோது எவ்வாறு இருந்தான்?
5. நெல்லிக்கனியின் பெருமையைப் பற்றி அதியமான் கூறிய பதில் யாது?
6. ஔவையார் – ஆசிரியர் குறிப்பு எழுதுக.
7. வாழ்வில் எல்லார்க்கும் கிடைத்தவையாகப் பாரதிதாசன் கருதுவன யாவை?
8. முக்கூடற்பள்ளு – நூல் குறிப்பு தருக.
9. வேற்றுமை என்றால் என்ன? அதன் உருபுகள் யாவை?
10. திணை என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

**V** **பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**

*Write a letter on any one of the given subjects.* **(1x10=10)**

1. நீ சுற்றுலா சென்று வந்த இடம் குறித்து நண்பனுக்கு கடிதம் எழுதுக.
2. கணிப்பொறியின் சிறப்பை விளக்கி உன் தம்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.
3. உன் பிறந்தநாள் விழாவிற்கு பங்கேற்க அழைப்பு விடுத்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

*****